

முதலமைச்சர் அவர்கள் “மக்களுடன் முதல்வர்” திட்டத்தை ஊரகப் பகுதிகளில் விரிவுபடுத்தி தருமபுரி மாவட்டத்தில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாவட்டம், காமலாபுரம் கிராம சேவை மையத்தில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாமில் வழங்கிய மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, வருவாய்த்துறை சான்றிதழ்கள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் வழங்கினார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச் சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



கோவை – ராமநாதபுரம் பகுதி வார்டு எண்: 63 பெருமாள் கோயில் மைதானம் பகுதிகளில் நடைபெற்ற இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை பணியை தமிழ்நாடு வீட்டு வசதித்துறை , நகர்ப்புற வளர்ச்சித் துறை,மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா.கார்த்திக் ஆகியோர் தொடங்கி வைத்தனர். கோவை மாநகர் மாவட்ட இளைஞர் அணி சார்பில் கோவை மாநகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் இரா.தனபால், துணை அமைப்பாளர் லாராபிரேம்தேவ், அருண்குமார் மேற்பார்வையில் ராமநாதபுரம் பகுதி செயலாளர் ப.பசுபதி தலைமையில்,63 வது வட்டக் கழகச் செயலாளர் சண்முகசுந்தரம் முன்னிலையில் இல்லந்தோறும் இளைஞர் அணிஉறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது இந்த நிகழ்வில் தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் வெ.ந.உதயகுமார், மு.மா.ச.முருகன், கோவை மாநகராட்சி பணிக்குழு தலைவர் சாந்தி முருகன், லட்சுமி சண்முகம், வழக்கறிஞர் ஆறுஸ், குட்டி கார்த்தி, செந்தில்குமார், உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலினின் சீரிய நடவடிக்கை!

3- ஆம் பக்கத் தொடர்ச்சி

கூட்டுறவு சங்கங்கள் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்திடவும், 1,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்குத் தீவனப்புல் வளர்க்கவும் விதைத் தொகுப்பு மற்றும் புல்கறணைகள் ரூ100 கோடி செலவில். வழங்கப்பட்டுள்ளன.

13 மகாத்மா காந்தி தொழிலாளர்கள் ஒப்பந்தம் மற்றும் திறன் மேம்பாட்டுக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ரூ. 196 கோடி மதிப்பீட்டில் சுகாதார அங்காடிகள் அமைக்கப்படுவதற்கு ரூ. 98 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் வாழ்வாதாரத் தொழில்களை மேற்கொள்ள தாட்கோ வழங்கும் ரூ.2.50 இலட்சம் மானியத் தொகை ரூ.6.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வசிக்கும் வீடற்ற 443 இருளர் பழங்குடியின குடும்பங்களுக்கு ரூ.19.38 கோடி செலவில் வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் ஆண்டுதோறும் ரூ.100 கோடி மதிப்பீட்டில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

17 மாவட்டங்களில் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் 20 சமுதாயக் கூடங்கள் ரூ.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்படுகின்றன. .

அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய இருளர் பழங்குடியினர்களுக்கு (Particularly Vulnerable Tribal Groups) 1094 புதிய வீடுகள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தர அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

1000 தூய்மைப் பணியாளர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் கட்டும் பயனாளிகள் பங்களிப்புடன் கூடிய வீடுகள் வாங்க மானியம் வழங்கப்பட்டுள்ளது.

சாதி வேறுபாட்டைக் களைய சமத்துவச் சுடு காட்டுடன் சமூக நல்லிணக்கம் வளர்த்து வாழும் 37 மாவட்டங்களில் உள்ள 37 கிராமங்களுக்கு ரூபாய் 10 இலட்சம் நிதி வழங்கப்பட்டு, அக்கிராமங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றது முதல் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகின்றது.

2023 - 2024 ஆம் நிதியாண்டில் மாநில அரசு நிதியுதவியுடன் 12 நபர்களை கொண்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு குழுவிற்கு ரூ.2.50,000/- வீதம் 229 குழுக்களுக்கு ரூ.5.72 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

தூய்மைப் பணியாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக தேசிய துப்புரவுப் பணியாளர்கள் நிதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின்மூலம் 587 தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தார்களுக்கு ரூ.1.09 கோடி கால முறை கடன் வழங்கப்பட்டுள்ளது.

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆதிதிராவிட சமுதாய மக்களின் முன்னேற்ற த்தில் தனிக்கவனம் செலுத்தி வருவதன் காரணமாக வாழ்க்கைத்தரம் நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்து வருகிறது. அரசின் சீரிய முயற்சி காரணமாக ஆதிதிராவிட இளைஞர்கள் கல்வியிலும் தொழிலிலும் முன்னேற்றம் அடைந்து சமத்துவ சமுதாயத்தின் பிரதிநிதிகளாக உருவாகி வருகிறார்கள். இந்தியாவின் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களிலும், வெளிநாடுகளிலுள்ள சிறந்த கல்வி நிறுனங்களிலும் உயர் கல்வி படிப்பினையும், முனைவர் படிப்பினை மேற்கொண்டு வருகின்றனர்.**




பழங்குடியினருக்கான வாழ்வாதார திட்டத்தின் கீழ், வேளாண் பொறியியல் இயந்திரங்கள், சூரியமின் சக்தியுடன் இயங்கும் அரவை இயந்திரங்கள் வழங்குதல்



ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கிடையே ஆந்திரா மாநிலத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டின் சார்பில், பங்கேற்ற மாணவர்களுடன் கலந்துரையாடல்.

## தமிழ்நாட்டில்

# மனுநீதிச் சோழன் போல் சிறப்பான ஆட்சி நடத்தி வருகிறார் முதல்வர்!

### கள்ளக்குறிச்சி ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாமில் அமைச்சர் எ.வ.வேலு பெருமிதம்!



கள்ளக்குறிச்சி, ஜூலை 14-

தமிழகத்தில் மனுநீதி சோழன் போல் சிறப்பான ஆட்சி செய்து வருகிறார் நமது தமிழக முதல்வர் என மக்களுடன் முதல்வர் திட்ட சிறப்பு முகாமில் அமைச்சர் எ.வ.வேலு பெருமிதத்துடன் கூறினார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட வாணாபுரத்தில் ஊரகப் பகுதிகளில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை பொதுப் பணி நெடுஞ்சாலை துறை மற்றும் சிறு துறைமுகங்கள் அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் தலைமையில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க. கார்த்திகேயன், வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர், தா.உதயசூரியன், வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர், உளுந்தூர் பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜெ.மணிக்கண்ணன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர்கள் முன்னிலையில் இம்முகாம் நடைபெற்றது.

இந்த முகாமில் பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

தமிழகத்தில் மனுநீதி சோழன் போல் மிகச் சிறப்பான முறையில் ஆட்சி செய்து வருகிறார் நமது தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், இந்தியாவில் ஆட்சி புரியும் முதல்வர்கெல்லாம் முதல்வராக சிறந்த முதல்வராக நமது முதல்வர் திகழ்ந்து வருகிறார் மேலும் 24 மணி நேரமும் பொது மக்களுக்கு தேவையான அனைத்து திட்டங்களையும் வசதிகளையும் நிதிகளையும் உடனடியாக கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் அயராமல் உழைத்துக் கொண்டு வருகிறார்.

மேலும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊமராட்சிகளிலும் உள்ள பொதுமக்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெற வேண்டும் என்பதற்காகத் தான் முதலமைச்சர் நேற்று முன்தினம் ஊரகப் பகுதிகளில் மக்களுடன் முதல்வர் திட்டத் தினை தருமபுரி மாவட்டத்தில் தொடங்கி வைத்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக வாணாபுரம் ஊராட்சியில் ஊரகப் பகுதியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நடைபெற்று வருகிறது. இத்திட்டம் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள 9 ஊராட்சி ஒன்றியங்களில் நேற்று முன் தினம் முதல் தொடங்கி வருகிற 12.9.2024 வரை 70 முகாம்கள் நடைபெற உள்ளது, இம்முகாம்களை பொது மக்கள் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும். இத்திட்டத்தின் கீழ், பெறப்படும் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பான பொது மக்களின் மனுக்களை மாவட்ட ஆட்சியர் மேற்பார்வையில், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் விரைவாக பரிசீலனை செய்து, மனுக்களுக்கு தீர்வு காண உள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சத்தியநாராயணன், ஒன்றிய கழக செயலாளர்கள் பெருமாள், துரை முருகன், பாரதிதாசன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் புவனேஷ்வரி பெருமாள், ரிஷிவந்தியம் ஒன்றியக் குழுத்தலைவர் வடிவுக்கரசி சாமி சுப்ரமணியன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் மு.தங்கம், ஒன்றிய குழு துணைத் தலைவர் சென்னம்மாள் அண்ணாதுரை, ரிஷி வந்தியம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், சந்திரசேகரன், வாணாபுரம் வருவாய் வட்டாட்சியர் குமரன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் கோவிந்தராஜன், அமிர்தம், ராஜேந்திரன், வாணாபுரம் ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் மணிகண்டன், ஊராட்சி மன்றத் தலைவர் தீபா அய்யனார், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளை கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்ட ஊரகப் பகுதிகளில் - ‘மக்களுடன் முதல்வர்’ திட்டம்!

### சிறுவாச்சூர் ஊராட்சியில் – அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்! கே.என்.அருண் நேரு எம்.பி. பங்கேற்பு!

பெரம்பலூர், ஜூலை,14-

ஊரகப்பகுதிகளில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வை பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம், சிறுவாச்சூர் ஊராட்சிக் குட்பட்ட ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் மக்களோடு அமர்ந்து போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரலையில் நிகழ்ச்சியை பார்த்து பின்னர், மக்களுடன் முதல்வர் முகாமை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு , பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி ச.ஷ்யாம்ளா தேவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுமக்கள் அன்றாடம் அணுகக்கூடிய அரசுத்துறைகளின் அலுவலர்களை ஒருங்கிணைத்து சிறப்பு முகாம் நடத்தி மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெறும் ”மக்களுடன் முதல்வர்” என்ற திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 18.12.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டம் ஆவாரம்பாளையத்தில் தொடங்கி வைத்தார். அதனையடுத்து பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, ஒரு மாத காலத்திற்குள் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு 6.02.2024 அன்று பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 1,320 பயனாளிகளுக்கு பல்வேறு அரசுத்துறைகளின் திட்டங்களின் மூலம் ரூ.2.20 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரகப்பகுதி மக்களுக்கான ”மக்களுடன் முதல்வர்” திட்டத்தை தர்மபுரி மாவட்டத்தில் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சி சிறுவாச்சூர் ஊராட்சி ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நேரலையில் ஒளிபரப்பப்பட்டது. போக்குவரத்துத்துறை அமைச்சர் நேரலை நிகழ்வைப் பார்வையிட்ட பின், முகாமினை தொடங்கி வைத்து பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். மேலும், முகாம்களின் பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் ஆன்லைனில் பதிவு செய்யப்படும் முறை, வழங்கப்படும் சேவைகள் குறித்தும் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் வைத்தியநாதன் (பொது), ஜெய்சங்கர்(ஊராட்சி வளர்ச்சி), ஊராட்சிகளுக்கான உதவி இயக்குநர் வீரமலை, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் திருமதி மீனா அண்ணாத்துரை (பெரம்பலூர்), க.இராமலிங்கம் (வேப்பந்தட்டை), திருமதி பிரபா செல்லப்பிள்ளை (வேப்பூர்), பேரூராட்சித் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் தழுதாழை பாஸ்கர், அ. கருணாநிதி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் அனைத்துத் துறை களின் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. வழக்கறிஞர் அணி மாவட்ட - மாநகர அமைப்பாளர்கள் -

# சட்டத்துறை மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

### கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

சென்னை, ஜூலை 14-

தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் என். ஆர்.இளங்கோ எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

21.07.2024 காலை 9.00 மணி அளவில் சென்னை, எழும்பூரில் உள்ள “ஓட்டல் ரமடா”வில், எனது (என். ஆர்.இளங்கோ எம்.பி.) தலைமையில் “தி.மு.க. வழக்கறிஞர் அணி மாவட்ட/ மாநகர அமைப்பாளர்கள் மற்றும் சட்டத்துறை மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்” நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் இந்து அறநிலையத் துறை அமைச்சர் பி. கே.சேகர்பாபு துவக்கவுரை ஆற்றிட, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி ஆகியோர் சிறப்புரை ஆற்றிட, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி நிறைவு ரையாற்றிட உள்ளனர்.

இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான அழைப்பு அந்தந்த மாவட்ட/மாநகர அமைப்பாளர்களுக்கு தனித்தனியே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வருகிற 27.7.2024 அன்று மாலை 4.00 மணியளவில் தென்மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, சித்த மருத்துவமனை அருகில் உள்ள நூற்றாண்டு மண்டபத்தில் அரசியல் அமைப்பிற்கு எதிரான ஜனநாயகத்திற்கு விரோதமான ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசால் அமல்படுத்தப் பட்டுள்ள மூன்று குற்றவியல் சட்டங்களை எதிர்த்து, தென் மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணியின் சார்பில், எனது தலைமையில், சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை அவர்கள் முன்னிலையில் “கருத்தரங்கம்”நடைபெற உள்ளது.

இக்கருத்தரங்கில், தென் மாவட்டங்களைச் சேர்ந்த தி.மு.க. வழக்கறிஞர் அணி மாவட்ட, மாநகர நிர்வாகிகள் மற்றும் கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.